2025 ஜனவரி 8]

54. The Government is committed to the welfare and protection of minorities in the State. Addressing a long-pending demand of minority institutions, the State Government has introduced a system of permanent minorities status certificates for all minority educational institutions. Additionally, the Government has launched a web portal for such institutions in order to simplify the procedure for the issuance of such certificates. Further, the Government has demonstrated its commitment to preserving the cultural and religious heritage of minority communities by allocating significant funds for the repair and renovation of places of worship.

55. The Keezhadi museum, inaugurated by our Hon'ble Chief Minister has received widespread acclaim and appreciation, attracting over *6* lakh visitors from across the globe to experience the cultural history of our State. Building on this success, it is planned to globally showcase the rich and timeless heritage of Tamil culture through the establishment of a world-class 'Porunai Museum' in Tirunelveli, featuring antiquities discovered during the Adichanallur, Sivagalai, and Korkai excavations. A museum commemorating the indomitable Rajendra Cholan's conquests and international trade relations is also being set up at Gangaikondacholapuram. Currently, archaeological excavations are being conducted at eight sites, alongside offshore exploration in Korkai.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்டது தமிழ்நாடு – பாரதி.

56. As Mahakavi Bharathiyar aptly noted, "Tamil Nadu earned eternal glory, by dedicating Valluvar to the world, the embodiment of wisdom and Universal Brotherhood". This year marks the Silver Jubilee of the iconic Thiruvalluvar Statue which is also known as the 'Statue of Wisdom' in Kanyakumari, established by Muthamizh Arignar Kalaignar. Through his *133* chapters, Thiruvalluvar emphasized universal values such as comparison, virtue and equality. In commemoration of the silver jubilee year, as a first in the country, a glass bridge was inaugurated by the Hon'ble Chief Minister connecting the

[2025 ஜனவரி 8

Vivekananda rock with Thiruvalluvar Statue in the southern peninsular tip of Kanyakumari. This milestone year serves as a tribute to his remarkable legacy and an opportunity to promote the immortal teachings of Thirukkural among the younger generation.

57. This Government is committed to the principles of self-respect, social justice, equality, rational thinking, and empathy. Its path is guided by the thoughts and ideals of noble leaders like Thanthai Periyar, Annal Ambedkar, Perunthalaivar Kamarajar, Perarignar Anna, and Muthamizh Arignar Kalaignar.

58. Since this Government has assumed office, we have not only delivered on the promises made to the people but have surpassed their expectations. We stand before the people today proud of the feats we have accomplished and the progress we have achieved together in this short time. We remain dedicated to the well-being and prosperity of the people of Tamil Nadu and stand firm on the commitment to realize the grand Tamil dream. We extend our heartfelt gratitude to the people of the State for reposing their unwavering trust in our Government during the recent Parliamentary elections and we will leave no stone unturned to fulfil these expectations in the coming days. This Government will ensure that Tamil Nadu remains the torchbearer of social justice, communal harmony, rational thinking and democratic ideals for the entire nation. This Government will work tirelessly to make Tamil Nadu a role model not only to other states in the country but also to the entire South Asian region.

59. Once again, I wish everyone a very happy Pongal. I conclude my address with the immortal words of Mahakavi Bharathiyar.

Vazhiya Senthamizh!

Vazhga Natramizhar!

Vazhiya Bharatha Mani Thiru Nadu!

[2025 ஜனவரி 8

54. சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கு உரிய அரணாக விளங்கிடும் இந்த அரசு அவர்கள் நலனைக் காத்திடும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. சிறுபான்மையினரின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கான நிரந்தரச் சான்றிதழ்களை இணையவழியில் எளிமையாக வழங்கிட இந்த அரசு உத்தரவிட்டது. மேலும் சிறுபான்மைச் சமூகங்களின் வழிபாட்டுத்தலங்களை புனரமைத்துப் பாதுகாக்கும் பொருட்டு கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

55. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட கீழடி அருங்காட்சியகம், சர்வதேச அளவில் பெரும் பாராட்டுகளைப் பெற்றதுடன், இதுவரை, உலகெங்கும் இருந்து 6 இலட்சத்திற்கும் மேலான பொதுமக்களும் பார்வையிட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின்போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களைக் கொண்டு, திருநெல்வேலியில் உலகத் தரம்வாய்ந்த 'பொருநை அருங்காட்சியகம்' நிறுவுவதன் மூலம், தமிழ்ப் பண்பாட்டின் வளமான, காலத்தைக் கடந்து நிற்கும் பழம்பெருமையினை உலகிற்கு வெளிப்படுத்திட இந்த அரசு திட்டமிட்டுள்ளது. மேலும், இராஜேந்திர சோழனின் கடல் கடந்த வெற்றிப் பயணம் மற்றும் அயல்நாட்டு வணிகத் தொடர்புகளை நினைவுகூறும் வகையில், கங்கைகொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது எட்டு இடங்களில் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளும், கொற்கை துறைமுகப் பகுதியில் முன்கள ஆய்வும் நடைபெற்று வருகின்றன.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்டது தமிழ்நாடு – பாரதி.

56. மகாகவி பாரதியின் மேற்குறிப்பிட்ட கூற்றிற்கிணங்க, "வான்புகழ் கொண்ட திருவள்ளுவரை இவ்வுலகிற்கே கொடையளித்து, தமிழ்நாடு பெரும்புகழ் அடைந்துள்ளது." கன்னியாகுமரியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால்

2025 ஜனவரி 8]

'பேரறிவின் சிலையாக' நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு இந்த ஆண்டு வெள்ளிவிழா ஆண்டாகும். திருவள்ளுவர் தனது 133 அதிகாரங்கள் மூலம் அன்பு, அறநெறி மற்றும் சமத்துவத்தின் பெருமைகளை உலகெங்கும் ஒலிக்கச் செய்துள்ளார்.இந்த வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு, குமரி முனையில் அமைந்துள்ள விவேகானந்தர் பாறையையும் திருவள்ளுவர் சிலையையும் இணைக்கும் வகையில், நாட்டிலேயே முதலாவதாக அமைக்கப்பட்ட கண்ணாடி இழைப் பாலத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். இந்த வெள்ளிவிழா ஆண்டு கொண்டாடப்படுவது, திருவள்ளுவரின் மாண்பினைப் போற்றுவதற்கும், எதிர்காலச் சந்ததியினருக்கு திருக்குறளின் உயரிய கருத்துகளை எடுத்துச் செல்வதற்கும் உரிய வாய்ப்பாக அமையும்.

57. சுயமரியாதை, சமூகநீதி, சமத்துவம், பகுத்தறிவுச் சிந்தனை மற்றும் பரிவு ஆகிய கொள்கைகளைச் சிறிதளவும் பிறழாது கடைப்பிடிக்க இந்த அரசு உறுதிகொண்டுள்ளது. தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற பெருந்தலைவர்களின் சிந்தனைகள் மற்றும் கொள்கைகள் இந்த அரசை தொடர்ந்து வழிநடத்தி வருகின்றன. எதிர்காலத்திலும் வழிநடத்தும்.

58. நமது அரசு பொறுப்பேற்றது முதல், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அவர்களது எதிர்பார்ப்புகளுக்கும் மேலாகவே நிறைவேற்றியுள்ளதுடன், குறுகியகாலத்தில் செய்த இச்சாதனைகள் குறித்தும், ஒருமித்த முன்னேற்றம் குறித்தும் இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வு மற்றும் வளத்திற்காக தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயலாற்றி, மாபெரும் தமிழ்க் கனவை நனவாக்கிட இந்த அரசு முழுமூச்சுடன் பாடுபடும். நமது அரசின் மீது தமிழ்நாட்டு மக்கள் வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையினை அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தல் முடிவுகள் மூலம் வெளிப்படுத்தியமைக்குத் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அந்நம்பிக்கையினை இனிவரும் நாட்களிலும் இந்த அரசு தவறாது காத்திடும். ஒட்டுமொத்த